# மாணவர் விழிப்புணர்வுக்காக மெட்ரோ ரயிலில் பயணம்

■ சென்னை

சென்னையில் தற்போது விமான நிலையம் - ஆலந்தூர் - சின்னமலை, பரங்கிமலை - கோயம்பேடு - நேரு பூங்கா வரையில் மெட்ரோ ரயில்கள் தினமும் இயக்கப்படுகின்றன.

மெட்ரோ ரயில் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளி மாணவர்களை அழைத்து வந்து, மெட்ரோ ரயில்களில் பயணம் செய்ய மெட்ரோ ரயில் நிறுவனம் சிறப்பு ஏற்பாடு செய்து வருகிறது. அதன்படி, கடந்த நிதி ஆண்டில் மட்டும் 200 பள்ளிகளைச் சேர்ந்த 19,500 மாணவர்கள் பயணம் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறும்போது, "மெட்ரோ ரயில்களின் சிறப்புகள் குறித்து பள்ளி மாணவர்களிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மெட்ரோ ரயில் இயக்கம் குறித்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்து வருகிறோம். இந்த நிதி ஆண்டிலும் மாணவர்களை அழைத்து வந்து, விழிப்புணர்வு ஏற்படுத்த நிர்வாகம் முடிவு செய்துள்ளது" என்றார்.